**தலைப்பு 117 – உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 117 – உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 திசெம்பர் 12 திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும், என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**2.1.1 மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்கு வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 182,198.69 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 152,505.02 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 29,693.67 மில்லியன் எனப்படும் 16.30 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருவன | 4,464.69 | 3,417.95 | 1,046.74 | 23.44 |
| மூலதனம் | 177,734.00 | 149,087.07 | 28,646.93 | 16.12 |
| மொத்தம் | **182,198.69** | **152,505.02** | **29,693.67** | **16.30** |

### 2.1.2 வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் இருந்து வழங்கியிருந்த நிதியேற்பாடுகளைப் பயன்படுத்தல்

பல்வேறு கருமங்களுக்காக அமைச்சுக்கு வேறு 03 அமைச்சுகளில் இருந்து ரூபா 752.31 மில்லியனிற்கான நிதியேற்பாடுகள் வழங்கியிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அவற்றில் ரூபா 98.93 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், வழங்கியிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 653.38 மில்லியன் எனப்படும் 86.85 சதவீதத்திற்கான நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **ஏற்பாடுகள் வழங்கியிருந்த அமைச்சு** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | |
|---|---|---|---|
| | **ஏற்பாடு** | **பயன்படு** | **சேமிப்பு** |
| | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** |
| பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு | 402.31 | 98.93 | 303.38 |
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | 200.00 | - | 200.00 |
| சிறைச்சாலைகள் மறுசீராமைப்பு, புனர்வாழ்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவலகள் அமைச்சு | 150.00 | - | 150.00 |
| மொத்தம் | 752.31 | 98.93 | 653.38 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சுக்குரிய 11701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள வாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள வாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள வாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 18.00 | 16.66 | 8.00 | 9.29 | 70.00 | 37.83 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழ் காணப்பட்ட 02 கட்டுநிதிக் கணக்குகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15.69 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **கட்டுநிதிக் கணக்குகளின் இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 7003/0000/00/0054/2016/000 | 15.67 |
| 7002/0000/00/0332/2016/000 | 0.02 |
| மொத்தம் | **15.69** |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் கீழ் காணப்படும் 06 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 624.20 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்குகளின் இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0176/000 | 0.09 |
| 6000/0000/00/0013/0135/000 | 168.03 |
| 6000/0000/00/0016/0123/000 | 391.79 |
| 6000/0000/00/0017/0033/000 | 22.48 |
| 6000/0000/00/0018/0114/000 | 0.31 |
| 6000/0000/00/0020/0021/000 | 41.50 |
| மொத்தம் | **624.20** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன், மேலும் இரண்டு பதிவேடுகள் முறைசார் விதமாக மற்றும் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | சேதங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | உயர்கல்விப் பிரிவில் நிலையான சொத்துக்கள் பதிவேடு இற்றை படுத்தப்பட்டு பேணப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | ஒதுக்கீட்டு நியம வாக்குப்படி பேரேடு | நிதிப்பிரமாணம் 447(5) | நெடுஞ்சாலைகள் பிரிவில் ஒதுக்கீட்டு வாக்குப்படி பேரேடு இற்றைவரைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3.2 கணக்காய்விற்கான சான்றுகள் சமர்பிக்கப்படாமை

2016 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் 45 செலவு விடயங்களில் வழங்கப்பட்டிருந்த தேறிய ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் கூட்டுத்தொகை ரூபா 9,148 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தினால் போதியளவினதாக கட்டுநிதிகள் வழங்கப்படாமையினால் அந்த சேமிப்புக்கள் ஏற்பட்டன என கணக்காய்விற்கு சமர்பித்திருந்த ஒதுக்கீட்டுக் கணக்கில் காரணமாக காட்டப்பட்டிருந்தது. எனினும், 2015 திசெம்பர் 14 திகதிய 08/2015 ஆம் இலக்க திறைசேரி செயற்பாட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த கட்டுநிதி தேவைப்பதிவேடு கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்காமையால் ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்த காரணங்களின் பிழையற்ற தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

## 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உயர்கல்வி பிரிவில் 54 செலவு விடயங்களுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 88.15 மில்லியனில் மீளாய்வாண்டின் போது பயன்பாடு ஏதும் மேற்கொள்ளப்படாமையால் அந்த ஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சின் நெடுஞ்சாலைகள் பிரிவினால் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது விண்ணப்பித்திருக்காத போதிலும், 3 செலவு விடயங்களின் கீழ் கூட்டுத்தொகை ரூபா 305 மில்லியனிற்கான ஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் குறிப்பிட்டிருந்தது. இதன் காரணமாக, மீளாய்வாண்டு இறுதியளவில் அந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர், வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 83 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சு அளவினை கொண்டிருந்தது.

(இ) அமைச்சின் உயர்கல்விப் பிரிவினால் 03 செலவு விடயங்களுக்காக குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கத்தின் மூலம் கூட்டுத்தொகை ரூபா 704.4 மில்லியன் ஏற்பாடுகளை பெற்றிருந்தது. எனினும், குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கத்தின் மூலம் ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் போது குறிப்பிட்டிருந்த கருமங்களுக்காக அந்த ஏற்பாடுகளைப் பயன்பத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஈ) அமைச்சின் உயர்கல்வி பிரிவின் கீழான 19 செலவு விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமையால் அந்த ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு 25 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சு அளவினைக் கொண்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக மற்றும் மாவட்டங்களில் செயற்படுத்தியிருந்த உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 2,991 மில்லியனுக்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. ஒப்பந்த வேலைகள் வழங்குவதில் தாமதித்தல், ஒப்பந்தக்காரர்களினால் வேலைகள் நிறைவேற்றுவதில் தாமதித்தல், மூலப் பொருட்கள் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்படல் மற்றும் ஆலோசனையாளர் மாறுதல் போன்ற செயற்திட்ட முகாமைத்துவ பலவீனங்கள் காரணமாக வழங்கப்பட்டிருந்த தேறிய ஏற்பாடுகளில் 50 சதவீத்தை விட கூடிய தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குச் சமர்பித்திருந்த இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,035,571 தொகையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவையாக இருந்த கடன் மீதிகள் 01 வருடம் முதல் 26 வருடங்கள் வரை கால வீச்சில் இருந்து காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் அந்த நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்யும் பின் தொடர் நடவடிக்கை பலவீன நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) நெடுஞ்சாலைகள் பிரிவில் CC-10 பதிவேடு முறைசார் விதமாக இற்றைப்படுத்தப்படாமையால் இணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்த கடன் மீதிகளின் பிழையற்ற தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

## 3.5 வைப்புக் கணக்கு

அமைச்சின் பொது வைப்புக் கணக்குகளில் 02 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 54.7 மில்லியன்களுக்கான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 571(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.6 நள்ளாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.6.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு திட்டங்களின் மூலம் இணக்கப்பாட்டு பரிசோதனைகள் மீது கவனம் செலுத்தியிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு நோக்கெல்லைக்கு பொருத்தமற்ற விடயம் பரப்புகள் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டு இருந்தது என அவதானிக்கப்பட்டது.

### 3.6.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்படும் விடயங்களின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்தக்கூடிய விதமாக பொழிப்பு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்களை உரிய பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு சாட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 3.6.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட வேண்டுமெனினும், அவ் அறிக்கை 2017 திசெம்பர் 15 திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்கில் சொத்துக்களின் பெறுமதி

ஒதுக்கீட்டு கணக்கில் நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பான அசைவு அறிக்கையின் ஆரம்ப மீதியில் அமைச்சின் உயர்கல்வி பிரிவுக்கு சொந்தமான ரூபா 15.14 மில்லியன் பெறுமதியான இயந்திரங்கள் இயந்திர உபகரணங்களின் பெறுமதி இரண்டு தடவைகள் பதியப்பட்டிருந்தன. இதன் காரணமாக ஒதுக்கீட்டுக் கணக்கின் நடைமுறை அல்லாத சொத்துக்களின் அசைவு அறிக்கையில் காட்டியிருந்த பெறுமதி மேற்குறிப்பிட்ட தொகையினால் மிகையாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

### (ஆ) பிரதியீடு செய்யும் அடிப்படையில் வழங்கியிருந்த வாகனத்தை திருப்பி ஒப்படைக்காமை

முன்னர் பயன்படுத்திய வாகனத்தை நிதி அமைச்சுக்கு ஒப்படைக்கும் அடிப்படையில் நெடுங்சாலைகள் இராஜாங்க அமைச்சருக்கு வாகனம் ஒன்று கொள்வனவு செய்வதற்காக ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது ரூபா 32.81 மில்லியன் தொகைக்கு வாகனம் ஒன்று கொள்வனவு செய்திருந்ததுடன், 2017 திசெம்பர் 12 திகதி வரை முன்னர் பயன்படுத்திய வாகனத்தை நிதி மற்றும் ஊடக அமைச்சுக்கு ஒப்படைத்திருக்கவில்லை.

### (இ) வருடாந்த பண்டக் கணிப்பீடு நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### நெடுஞ்சாலைகள் பிரிவு

2016 மார்ச் 31 திகதிய 5/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தப் பண்டக் கணிப்பீடு ஒன்று நடாத்தி அதன் அறிக்கை 2017 மார்ச் 17 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்கவில்லை. அதன் பிரகாரம், ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பு (i) குறி காட்டப்பட்டிருந்த சொத்துக்களின் தேறிய மீதி நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பெறுமதிகளுடன் இணக்கஞ் செய்திருக்கவில்லை. அதே போல், வருடாந்த பண்டக் கணிப்பீட்டின் மூலம் சொத்துக்களின் பௌதீக உளமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### உயர்கல்வி பிரிவு

2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பண்டக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை 2017 மார்ச் 17 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்கவில்லை.

**(ஈ) சொத்துப் பதிவேடு பேணல் மற்றும் சொத்துக்களை உரித்தாக்கல்**

அமைச்சினால் விடுதிகள் செயற்திட்டத்தின் கீழ் 19 பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களில் ரூபா 11,681.85 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 45 விடுதிக் கட்டிடங்கள் அந்த பல்கலைக்கழக நிறுவகங்களின் கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், அந்த கட்டிடங்களை பல்கலைக்கழகங்களுக்கு எழுத்து மூலமாக சாட்டப்பட்டிருக்கவில்லை.

**(உ) வெளி சாராருக்கு கொடுத்திருந்த சொத்துக்கள்**

உயர்கல்வி அமைச்சுக்கு சொந்தமான இரண்டு வாகனங்களை வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், முறைசார் விதமாக சாட்டுதல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல், அவ் வாகனங்களின் பெறுமதியினை கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

**(ஊ) வேறு நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறை சாரா விதமாக பயன்படுத்துதல்**

வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் இருந்து கிடைத்திருந்த தகவல்களின் பிரகாரம் அமைச்சின் 09 வாகனங்கள் நெடுஞ்சாலைகள் பிரிவிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனங்களை 2017 செம்தெம்பர் 06 திகதி வரை மீண்டும் திருப்பி ஒப்படைத்திருக்கவில்லை. அதேபோல், அமைச்சில் இருந்து வழங்கியிருந்த தகவல்களின் பிரகாரம் அதிகார சபையில் இருந்து ஒரு வாகனம் மாத்திரம் பெற்றிருந்ததென விவரங்கள் அறிவித்திருந்த போதிலும் குறிப்பிட்ட வாகனங்களை ஒப்படைத்தல் மற்றும் ஒப்புக்கொள்ளல் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

**(எ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2016 திசெம்பர் 31 திகதியி உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்களின் தொகை ரூபா 25,268.26 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன், அது தொடர்பான காலப்பகுப்பாய்வு ஒன்று கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாண இலக்கம் 94 இற்கு முரணாக 57 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு ரூபா14,612.18 மில்லியனை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

(ii) உயர்கல்வி பிரிவில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 29,534,769 தொகை பெறுமதியான பொறுப்புக்கள் தொகையொன்று ஒதுக்கீட்டுக் கணக்கில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(iii) 2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்காத 06 செலவு விடங்களின் கீழ் ஏற்பட்டிருந்த ரூபா 1,426 மில்லியனிற்கான பொறுப்புக்கள், பொறுப்புக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) அமைச்சின் கீழ் காணப்படும் 11 பல்வேறு வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களில் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வெளிப்படுத்தியிருந்த பொறுப்புக்களின் தொகை மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கில்

குறிப்பிட்ட செயற்திட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்களின் பெறுமதி இடையே ரூபா 20,596 மில்லியனுக்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(v) மீளாய்வாண்டின் போது 13 அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய குறிப்பாக செலவு விடயத்தை இனங்காணாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 1,986.14 மில்லியன் தொகையாக இருந்தது.

### 3.8 இணக்கமின்மைகள்

#### (அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (i) நியதிச் சட்ட ஏற்பாடுகள் | | |
| 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்துடன் தொடர்புடைய 2015 ஜூலை 05 ஆம் திகதிய SEC/2015/05 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி ஆணையாளர நாயகத்தின் சுற்றறிக்கை | 500,000 | உழைக்கும் போதே செலுத்தும் வரி குறிப்பிட்ட சேவை நாடுனரினால் உரியர்களிடம் செலுத்த வேண்டியிருந்த போதிலும், வடக்கு பாதைகள் கூட்டிணைப்பு செயற்திட்டத்தின் மதிஉரைஞர்களின் உழைக்கும் போதே வரி செலுத்தும் செயற்திட்டத்தினால் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. |
| (ii) திறைசேரி சுற்றறிக்கை | | |
| 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 இலக்க சுற்றறிக்கை | - | I – Road செயற்திட்டத்தினால் ரூபா 13.31 மில்லியனிற்கு பெறுகைகள் செய்திருந்த பூகோல தகவல் முறையை மென்பொருளொன்று கணினிகள் மற்றும் மென்பொருள் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை. |
| (iii) தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | | |
| 2015 திசெம்பர் 29 திகதிய 07/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | - | 1202 – எரிபொருள் செலவு விடயத்திற்காக வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் 15 சதவீதம் கட்டாயமாகக் சேமிக்கப்பட்ட வேண்டுமெனினும் நெடுஞ்சாலைகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | பிரிவினால் அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (iv) | பொதுக் கணக்கு சுற்றறிக்கை | | |
| | 2017 அக்தோபர் 17 ஆம் திகதியிலும் 251/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.11 ஆம் பந்தி | 3,571,573,161 | சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்காக திறைசேரிக்கு அறிவித்திருந்த பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டியிருந்த பொறுப்புக்களிடையே விகிசாதாரம் ஒன்று காணப்பட்டது. |
| (v) | முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கைகள் | | |
| | 2006 மார்ச் 24 ஆம் திகதிய 1/2006 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | I-Road செயற்திட்டத்திற்காக ஒரு நபருக்கு ரூபா 60,000 இற்காக மாதாந்தப்படி செலுத்தி பயிலுனர் அடிப்படையில் 05 பொறியியலாளர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். |

**(ஆ) வரித் தேவைகளுக்கு இணக்கமின்மை**

மீளாய்வாண்டின் போது அமைச்சின் நெடுஞ்சாலைகள் பிரிவினால் ரூபா 7.92 மில்லியன் பெறுமதி கூடிய வரி செலுத்தியிருந்தது. அந்த வரி தொடர்பான அறிக்கை அரச பெறுகைகள வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.4.12 இன் பிரகாரம், தொடர்ந்து வரும் மாதம் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியொன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பியிருக்கவில்லை.

## 3.9 வெளிநாட்டுதவிச் செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியளிப்புக்களின் கீழ் 51 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அதனது மதிப்பீட்டு கிரயங்ளின் கூட்டுத்தொகை ரூபா 1,140 மில்லியனாகும். அந்த செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 105 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், 09 செயற்திட்டங்களுக்காக 2017 திசெம்பர் மாதம் வரை திரட்டிய நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்திருந்த போதிலும், நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வெளிநாட்டுதவி செயற்திட்டங்களில் செயலாற்றுகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) I – Raod செயற்திட்டத்தின் ஆரம்ப செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், தெற்கு, சப்பிரகமுவ, மத்திய, வட மத்திய, வட மேல் மாகாணங்கள் மற்றும் மேல் மாகாணத்தில் கழுத்துறை மாவட்டத்தில் 3,135.5 கிலோ மீற்றர்கள் கொண்ட 742 மாகாண மற்றும் கிராமிய பாதை வேலைகள் ஆரம்பிப்பதற்காக

எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட 42 ஒப்பந்த வேலை பகேஜ்களில் 15 பகேஜ்கள் 2016 திசெம்பர் 31 திகதியளவில் செயலாற்றுகை எதிர்பார்ப்பு இலக்கினை நெருங்கியிருக்கவில்லை. அதேபோல், வெளிக்கள பரிசோதனைகளில் பிரகாரம் இரத்தினபுரி மாவட்டத்தில் 02 ஒப்பந்த வேலை பகேஜ்களின் கீழ் 14 மாகாண மற்றும் கிராமிய பாதைகள் 92 கிலோமீற்றர்களில் 12.6 கிலோமீற்றர் மாத்திரம் புனர்நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரரினால் போதியளவு மனித மற்றும் பௌதீக வளங்களை ஈடுபடுத்துவதற்கு இயலாமையினால் குறிப்பிட்ட விடயங்கள் 11 மாதங்களில் தாமதிக்கப்பட்டிருந்தது.

(ii) தென் கிழக்கு பல்கலைக்கழக அபிவிருததி செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்தும் 09 நிர்மாண வேலைகளில் 05 நிர்மாண வேலைகளின் 2016 திசெம்பர் 31 திகதி அளவில் பௌதீக முன்னேற்றம், இலக்காகிய அளவுகளுடன் இணக்கஞ் செய்த போது 18 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சு அளவுகளில் காணப்பட்டது.

(iii) 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர்கல்விச் செயற்திட்ட (HETC) த்தின் கீழ் தெஹிவளை இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் நிர்மாணிக்கும் பண்புசார் அபிவிருத்தி மற்றும் தலைமைத்துவ நிலைய கட்டிடத்தின் நிர்மாண வேலைகளுக்காக ரூபா 80 மில்லியன் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. இந்த கட்டிடம் 2015 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2016 மே மாதம் அளவில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. எனினும், 2016 ஜுன் 30 திகதியில் உள்ளவாறு அதாவது செயற்திட்டம் முடிவடையும் திகதியன்று அந்த நிர்மாண வேலைகளின் பௌதீக முன்னேற்றம் 60 சதவீத அளவில் காணப்பட்டது. செயற்திட்டம் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமையால் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் ரூபா 19 மில்லியன் தொகையினை பயன்படுத்த முடியாதிருந்தது.

(iv) மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் 13 தேசிய பல்கலைக்கழகங்களில் மற்றும் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகங்களில் 240 கல்வி மற்றும் கல்வி சாரா பதவியணி உத்தியோகத்தர்களுக்கு தத்துவமானி, பட்டப்பின் படிப்பினை கற்பதற்காக ரூபா 366,859,467 இற்கான மானியம் வழங்கியிருந்த போதிலும், செயற்திட்டம் முடிவடையும் போதும் நலன்பெறுவோரில் 30 பேர் பாடநெறியினை பூர்த்தி செய்திருக்கவில்லை.

**(ஆ) வெளிநாட்டுதவி செயற்திட்டங்களில் அடங்கியுள்ள சில நிர்மாண வேலைகள் கைவிடப்படல்**

---

மட்டக்களப்பு – திருக்கொண்டாய் ஆறு – திருகோணமலை மற்றும் அம்பேபுஸ்ஸ – குருநாகல – திருகோணமலை பாதை, திருகோணமலை நகருக்கு வெளியே தொடர்பு கொள்ளுமாறு நிர்மாணிக்கப்பட்டிருக்கும் வெளி சுற்றுவட்ட பாதைக்காக ஐக்கிய இராச்சிய உருக்கு பாலம் செயற்திட்டத்தின் கீழ் 2009 மற்றும் 2010 ஆண்டுகளின் போது ரூபா 3,495 மில்லியன் செலவிடப்பட்டு 08 பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2017 ஆகஸ்ட் 31 திகதி அளவில் அவை 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்தப் பாலங்களைத் தொடர்புபடுத்தும் பாதைகளின் நிர்மாண வேலை விடயங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

**(இ) செயற்திட்ட நிதியப் பயன்பாடு**

வெளிநாட்டு மூலவள திணைக்களத்தினால் பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பயன்படுத்தப்படாத கடன் மீதிகளின் மீது 240,815 அமெரிக்க டொலர்களுக்கு சமமான ரூபா 34.88 இற்காக அர்பணிப்பாளர் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

**(ஈ) செயற்திட்டத்தை குறிப்பிட்ட தினத்தில் ஆரம்பிக்காமை**

மேல் மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2016 வருட இறுதியில் சிவில் மற்றும் ஆலோசனை ஒப்பந்த வேலைகள் ஏதும் வழங்கியிருக்காமையினால் அந்த செயற்திட்டத்திற்கு உரிய திட்டத்துடன் இணக்கஞ் செய்த போது செயற்திட்ட விடயங்களில் கணிசமான கால தாமதம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

**(உ) செயற்திட்டத்தின் காரணமாக சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம்**

மேல் மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட சுற்றாடல் விதப்புரைகள் தொடர்பான அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை.

**(ஊ) வேலைகளை ஆரம்பிப்பதற்கான முற்பணங்கள் வரையறையை மிகைத்து செலுத்துதல்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது தெற்கு, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் வீதிகளை புணரமைப்பதற்கு வேலைகளை பெற்றிருந்த ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,944.85 மில்லியன் தொகை வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. தற்காலிக விடயங்களுக்கான பணம் ஒதுக்குதல் மற்றும் நிகழக்கூடியவை உட்பட ஒப்பந்த வேலைப் பெறுமதிகள் மீது முற்பணங்கள் கணித்தல் காரணத்தினால் ரூபா 508.15 மில்லியன் தொகை அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.4.4(1) இற்கு முரணாக மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. 2017 மார்ச் 31 திகதி அளவிலும் செயற்திட்டத்தினால் மிகையாக செலுத்தியிருந்த முற்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) I – Road செயற்திட்டத்தின் மூலம் இரத்தினபுரி மாவட்டத்தில் மாகாண மற்றும் கிராமிய வீதிகளின் வேலைகளை பெற்றிருந்த ஒப்பந்தக்காரர் புதிய அலுவலக உபகரணங்கள் பெறுகை மேற்கொள்வதற்குத் தயாராகி ரூபா 4.72 மில்லியனிற்கான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், மதிஉரைஞர்களின் அறிக்கையின் பிரகாரம், வரிசை அமைச்சின் அங்கீகாரம் இன்றி முற்பணம் செலுத்தியதற்கான காரணத்தை மற்றும் முற்பணத்தை கணித்த முறை கணக்காய்விற்கு விளக்கப்படவில்லை.

**(எ) முகாமைத்துவ பலவீனங்கள்**

தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பௌதீக மற்றும் நிதி இலக்குகள் உட்படுத்தப்பட்டு செயல் நடவடிக்கை திட்டமொன்றினைத் தயாரித்தல் செயற்திட்ட முகாமையின் பொறுப்பு ஒன்றாக இருந்த போதிலும், I – Road செயற்திட்டத்திற்காக அவ்வாறான திட்டமொன்று

தயாரித்திருக்கவில்லை. இதன் காரணமாக செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் வினைத்திறனுடன் மற்றும் வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ளல் தொடர்பாக மதிப்பாய்வு ஒன்று மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது. அதேபோல், உரிய தரவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ஒவ்வொரு பகேஜின் கீழ் மாகாண வீதிகளின் புனர்நிர்மாண வேலைகளில் பௌதீக முன்னேற்றத்தை பரிசோதனை மேற்கொள்ளமுடியாதிருந்தது.

(ii) I – Road செயற்திட்டத்தின் மதிஉரை பகேஜ் உடன்படிக்கையின் 20 ஆவது உபபிரிவின் படி, அறிவினை பரிமாற்றம் செய்யும் குறிக்கோளுக்காக சப்பிரகமுவ, மத்திய மற்றும் மேல் மாகாணங்களின் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் மாகாண சபைகளின் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஒப்பந்த வேலைகளுக்காக இணைப்பதற்காக திட்டமிட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(iii) வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் தொடர்பில்லாத வீதிகளை விரிவாக்கல் மற்றும் புனர்நிர்மாணம் செய்யும் செயற்திட்டத்திற்காக நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமல் செயற்திட்டங்கள் ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், அதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெறுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) மகநெகும செயலகம் நிர்மாணித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

- 2010 ஆகஸ்ட் 17 திகதி ரூபா 599.3 மில்லியன் தொகைக்கு வழங்கப்பட்டிருந்த நெடுஞ்சாலைகள் அமைச்சுச் செயலகம் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த வேலை முறையான நிதி மற்றும் பௌதீக திட்டங்களின்றி ஆரம்பிக்கப்பட்டிருந்தமையால் அதன் கிரயம் ரூபா 2,506.54 மில்லியன் தொகை வரையான கூடிய பெறுமதியினைக் கொண்டிருந்தது.

- பௌதீக வரையினை மாற்றி அமைத்து ஒரே ஒப்பந்தக்காரருக்கு கூடிய கிரயத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தின் கட்டம் - III இன் பகுதியை நிர்மாணிக்கும் போது உடன்பட்டிருந்த ரேட்டை விட 13 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையான வீச்சு தொகையினால் முரண்பட்டிருந்தமையால் ரூபா 495.39 தொகை முரண்பாடுகள் கட்டளை சமர்பிக்கப்பட்டிருந்தது. அந்த முரண்பாடுகள் கட்டளையின் மீது மேலதிக செலவுக்காக 35 சதவீதத்திற்கான மேலதிக கட்டணம் ஒன்று அறவீடு செய்வதற்காக ஒப்பந்தக்காரருக்கு இடமளித்திருந்தது.
- ஒப்பந்த உடன்படிக்கையின் பிரிவு 14.10 இன் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்பட்டதற்கான சான்றிதழ் 2016 திசெம்பர் 31 திகதி வரை சமர்பித்திருக்கவில்லை. அவ்வாறாயினும், ரூபா 2,057 மில்லியன் பெறுமதிக்கான இறுதி பில் பத்திரம் சமர்பித்திருந்தது.

- கட்டிடத்தின் உள்ளக கட்டமைப்பு திட்டம் தயாரிக்கும் விடயத்திற்காக மதிஉரை கம்பனிக்கு ரூபா 21.03 மில்லியன் தொகை 2015 திசெம்பர் 31 திகதி அளவில் செலுத்தியிருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் சமர்பிக்கப்பட்ட வேண்டியிருந்த தேவையான உள்ளகக்

கட்டமைப்பு மற்றும் தேவையான விபரங்கள் (Drawing) சமர்பித்திருக்கவில்லை.

- 2015 பெப்ரவரி 17 திகதி கட்டிடத்திற்குத் தேவையான தளபாடங்கள் உபகரணங்கள் ரூபா 87.13 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்வதற்காக உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருந்த போதிலும் உள்ளக கட்டமைப்பின் வரைபு சமர்பிக்கப்படாமையால் 2016 ஏப்ரல் 30 திகதியளவிலும் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கல் விடயங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

- தளபாடங்கள் வழங்குவதற்காக ரூபா 26.73 மில்லியன் மற்றும் 6 ஆவது மாடியின் சிவிலினுக்காக ரூபா 39.63 மில்லியனிற்கான முரண்களுக்காக கட்டளை சான்றிதழ் சமர்பித்திருந்தது. செயற்திட்டப் பணிப்பாளரினால் அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.13.4 இற்கு முரணாக பிரதான கணக்கு உத்தியோகத்தரின் அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் அதற்கான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(v) ஹட்டன் - நுவரஎலிய வீதிகள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் வேலைகள் 2016 நவம்பர் 25 திகதி பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படல் தொடர்பான அறிக்கை 2017 ஜுன் மாதம் இறுதி வரை அமைச்சுக்கு சமர்பித்திருக்கவில்லை.

(vi) பதுளை - செங்கலடி வீதி அபிவிருத்தி செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அபிவிருத்தி விடயங்களுக்காக காணிகள் உரித்தாக்கும் முன்னேற்றம் 2017 ஜுன் 14 திகதியளவில் எதிர்பார்த்த இலக்குடன் இணக்கஞ் செய்த போது 33 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை வீச்சு அளவில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் ஒட்டுமொத்த செயற்திட்டத்தில் அபிவிருத்தி விடயங்களில் செயலாற்றுகையும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

- பொதுமக்கள் பயன்பாட்டு சேவைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் மற்றும் நிர்மாண வேலைக்கான முற்பணமாக ரூபா 689,053,711 தொகை செலுத்தியிருந்த போதிலும் அது தொடர்பாக உடன்படிக்கை ஏதும் மேற்கொண்டிருக்கவில்லை.

- ஒபெக் அபிவிருத்தி நிதியத்திலிருந்து (OFID) மற்றும் சவூதி அபிவிருத்தி நிதியத்தில் (SFD) இருந்து பெற்றிருந்த நிதிகள் தவிர ரூபா 2,538,312 இற்கான முற்பணமொன்று தேசிய சேமிப்பு வங்கியில் இருந்து கடனாக பெற்றிருந்த போதிலும், அதற்காக பெற்றிருந்த அங்கீகாரம் பற்றிய விபரங்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

(vii) ஒன்றித்த வீதிகள் அபிவிருத்தி செயற்திட்டத்தினால் முறையான ஆட்சேர்ப்பு திட்டத்தை கடைபிடிக்காமல் மற்றும் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் 11 மதிஉரைஞர் மற்றும் 03 பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இந்த உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4.50 மில்லியன் மாதாந்தப்படி மற்றும் வாகன வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், அந்த உத்தியோகத்தர்களுக்கு சாட்டப்பட்ட கருமங்கள், நாள் வரவு அறிக்கை மற்றும் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை.

(viii) கொழும்பு – கட்டுநாயக அதிவேக நெடுஞ்சாலை செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்திருந்த ரூபா 117.82 தொகை பெறுமதியான 13 வாகனங்களை செயற்திட்டம் முடிவடைந்ததும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்க வேண்டியிருந்தது. ஆனால் அவ்வாறு செய்யாமல், செயற்திட்டப் பணிப்பாளரினால் அடிப்படை ஒன்று இன்றி மற்றும் கட்டண அறவீடு ஒன்று இன்றி வெளிச்சுற்றுவட்டாரப் பாதை – III (கடவத்த முதல் கெரவலப்பிடிய வரையான பகுதி) (OCHP – III) செயற்திட்டத்தின் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ix) மாத்தறை - கொடகம பாதை நிர்மாணித்தல் தொடர்பாக ஆரம்ப கணியப்பத்திரங்களில் உட்படுத்திப்பட்டிருந்த ரூபா 161.33 மில்லியன் தொகை பெறுமதியான 214 வேலை விடயங்கள் அதாவது ஒப்பந்தப் பெறுமதியில் 29.09 சதவீத வேலைப்பகுதி அளவு அகற்றப்பட்டிருந்தது. மொத்த ஒப்பந்த வேலை பெறுமதியில் 20.5 சதவீதமான ரூபா 116.57 மில்லியனிற்கான வேலை அளவு ஒன்று புதிதாக சேர்க்கப்பட்டிருந்தது. அழுத்கம முதல் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வரை ரூபா 737.64 மில்லியன் தொகை பெறுமதியான 326 விடயங்களின் வேலைப்பகுதிகள் அகற்றப்பட்டிருந்தது.

(x) நெடுஞ்சாலைகள் அமைச்சினால் பணம் செலுத்துவதன் மூலம் அல்லது பிணைமுறிகள் வழங்குவதன் மூலம் 2010 ஆண்டு முதல் 2016 திசெம்பர் 31 திகதி வரை காலப்பகுதியில் கையொப்பமிட்டிருந்த காணிகள் தொடர்பாக தெளிவான சொத்துக்கள் அறிக்கையொன்று (பேரேடு) இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை கட்டம் - II இன் கீழ் நட்டஈடு வழங்கி உரித்தாக்கிய 1205 காணிப் பகுதிகளில் 614 காணிப்பகுதிகள் மாத்திரம் 1964 இன் 28 ஆம் இலக்க காணி உரித்தாக்கும் (திருத்திய) சட்டத்தின் 44 ஆம் இலக்க காணி உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், அமைச்சின் தலையீடு இன்றி செயற்திட்டத்தினால் உரித்தாக்கும் காணிகள் தொடர்பான விபரங்கள் அமைச்சுக்கு சமர்பித்திருக்கவில்லை. அதேபோல் பிணைமுறிகளின் மூலம் உரித்தாக்கிய காணிகள் தொடரபாக விபரங்களும் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

**(ix) தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நீடிப்புச் செயற்திட்டம்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப கணக்காய்வின் பிரகாரம் செயற்திட்டம் சாத்தியக்கூறுகளை உடைய செயற்திட்டம் ஒன்று ஆவதற்கு பொருளாதார உள்ளக விளைவு விகிதாசாரம்(EIRR) மறை 11.1 ஆக இருக்க வேண்டுமென தெளிவுறுத்தப்பட்டது. இது தொடர்பாக செயற்திட்டத்தின் கிரயநலன் பகுப்பாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் கடன் பெறுதல் தொடர்பான கலந்துரையாடல் குறிப்புக்கள் கணக்காய்விற்குச்

சமர்பித்திருக்கவில்லை. மேலும், அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 3.3 இன் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் இந்த செயற்திட்டத்திற்காக பெற்றிருந்ததென உறுதிப்படுத்துவதற்கு தேவையான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

- இந்த செயற்திட்டம் வரைபு தயாரித்து நிர்மாணிக்க வேண்டிய ஒப்பந்த வேலை ஒன்றாக இருந்தமையால் (Design and Build) ஒப்பந்தக்காரரினால் சமர்பிக்கப்படும் வரைபுகள் மற்றும் கணியப்பத்திரங்கள் சிறந்த முறையில் பகுப்பாய்வு செய்து விரிவான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அவ்வாறான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. அதேபோல் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் இறுதி மதிப்பீட்டிற்கான அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

- ஓட்டுமொத்த செயற்திட்டம் 4 கட்டங்களாக வேறாக்கப்பட்டு 04 ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த வேலை வழங்கப்பட்ட பெறுமதிகளும் மற்றும் பொறியியலாளர் மதிப்பீட்டிற்கு இடையே பொருண்மையான முரண்கள் அவதானிக்கப்பட்டன. விஷேடமாக நெடுஞ்சாலைகள் பிரிவின் மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் ஒப்பந்த வேலை இலக்கம் 01 பகுதியில் சீராக்கல் செய்யப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 73,892.19 மில்லியன்களாக காணப்பட்டதுடன், ஒப்பந்தக்காரருடன் இணங்கியிருந்த பெறுமதி ரூபா 103,280.00 மில்லியன் தொகையாகும். அதன் பிரகாரம் ஒப்பந்த வேலை வழங்கப்பட்ட விலை ரேட்டுக்கள் 40 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதேபோல், அந்த 01 ஆம் இலக்கப் பகுதிக்காக இணங்கியிருந்த ஒப்பந்த வேலைப் பெறுமதியுடன் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள சமமான 03 அதிவேக பாதைகளின் ரேட்டுடன் இணக்கஞ் செய்த போது இணங்கியிருந்த கூறுவிலை 14 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சு அளவு தொகையினால் உயர்ந்த கிரயத்தினை கொண்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

- சமர்பித்திருந்த கணியச் சிட்டையின் பிரகாரம் பாதைக்காக கொங்கிரீட் கலவைத் தூண்கள் (Concrete Mixing File) நிறுவப்பட வேண்டுமெனினும் அதற்கு பதிலாக சேவை வழங்கியவரின் அங்கீகாரம் இன்றி ஸ்பன் தூண்கள் (Spun File) நிறுவுவதற்கு தீர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த தூண்களை மதிஉரை கம்பனியினால் அங்கீகாரிக்கப்பட்ட ரேட்கள் மற்றும் சந்தையின் சராசரி கூறுவிலை இடையே வழமையல்லாத முரண்களின் பிரகாரம் சுமார் ரூபா 1,354 மில்லியன் தொகை மேலதிக கிரயமொன்று ஒப்பந்தக்காரருக்கு செலுத்துவதற்கு நேரிடும் என அவதானிக்கப்பட்டது.

- இந்தச் செயற்திட்டத்திற்கான ஆரம்ப மதிப்பீடு தயாரித்தல், பாதை வரைபுகள் தயாரித்தல் முன் சாத்தியதக்கூறு ஆய்வு மேற்கொள்ளல், ஆகிய பரப்புகளில் நடைபெற்ற பாரிய பலவீனங்கள் காரணமாக முன்னர் திட்டமிடப்பட்ட வேலை பகுதிகள் மீண்டும் மீண்டும் பொருண்மையான அளவு மாற்றப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் செயற்திட்டத்தின் காலத்தை நீடித்து ஒட்டுமொத்த செயற்திட்டத்தின்

கிரயம் அதிகரிக்கக் கூடும் என கணக்காய்வில் மேலும் அவதானிக்கப்பட்டது.

- நிர்மாண வேலைகளின் முதல் பகுதியில் (Section 1) கொங்கிரீட் நிர்மாண வேலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய கொங்கிரீட்களின் உஷ்ணத்தின் அளவினை பரிசோதனை செய்யும் வேலை குறிப்பிட்ட காரணம் காட்டப்படாமல் இன்றி மதிஉரை கம்பனியினால் அகற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாக அதன் கணிய சிட்டை விடயத்தின் கிரயம் பகுப்பாய்வு செய்திருக்காமையால் மொத்த ரேட்டின் அடிப்படையில் 3,042,253 நீள மீற்றர்களுக்காக ரூபா 445,500 வீதம் ரூபா 13,553 மில்லியன் தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த பரிசோதனைக்காக கணிய பத்திரங்களில் அடங்கியுள்ள சராசரி கிரயம் நீள மீற்றர் ஒன்றிற்கு சுமார் ரூபா 30,000 ஆகின்றமையால் சுமார் ரூபா 912 மில்லியன் தொகை சிக்கனமற்ற முறையில் மற்றும் அடிப்படையொன்று இன்றி மிகையாக செலுத்தியிருந்தது.

— மேற்கூறிய நிர்மாணவேலை விடயங்களுக்காக Grand Compaction File முறைமை மிகவும் பொறுத்தமானதா என மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அப்பரிசோதனையில் வெற்றியடைந்தால் மாத்திரம் நீள மீற்றர் ஒன்றிற்கு ரூபா 6,400 தொகை வீதம் செலுத்தவதென இணங்கியிருந்தது. அவ்வாறாயினும் அப் பரிசோதனை தோல்வியடைந்திருந்த போதிலும் ஒப்பந்தக்காரருக்கு நீள மீற்றர்கள் 41,970.08 தொகைக்காக ரூபா 266.61 மில்லியன் தொகை செலுத்தியிருந்ததுடன் கொடுப்பனவுக்கு அடிப்படையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

— ஒப்பந்த உடன்படிக்கையின் இரண்டாம் தொகுதியில் 4.2 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள பொதுவான நிபந்தனைகளின் பிரகாரம் செயலாற்றுகை பிணை முறைகளின் கிரயம் ஒப்பந்தக்காரர்களால் பொறுப்பெடுக்க வேண்டும். அவ்வாறாயினும், அந்த நிபந்தனைகளுக்கு முரணாக ஒப்பந்த வேலையின் முதற்பகுதிக்காக ரூபா 128.42 மில்லியனிற்கான செயலாற்றுகை பிணை முறிக்காக ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதே போல் ஒப்பந்த வேலையின் 03 ஆம் பகுதி தொடர்பாக கணிய பத்திரங்களின் செயலாற்றுகை பிணை முறிகள் ஒரே தடவை செலுத்தும் பணமாக (LUMP Sum) உட்படுத்தியிருந்தமையினால் ரூபா 99.37 மில்லியன் தொகை உட்படுத்தப்பட்டிருந்தது.

— ஒப்பந்த வேலையின் 01 ஆம் பகுதிக்காக அனுமதி வழங்காத (Negetive List) பண்ட வகையில் அடங்கும் ரூபா 368.71 மில்லியன் தொகைக்கு சமமான 2,448,000 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சீமெந்து தொகையொன்று வரிச் சலுகை அடிப்படையில் இறக்குமதி செய்வதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதே போல் அனுமதி வழங்கப்படாத பண்ட அட்டவணையிலுள்ள உருக்கு கம்பிகளும் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

— சுங்க கட்டளைச் சட்டத்தின் 22(ஓ) அத்தியாயத்தின் கீழ் வரிச் சலுகை அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட உபகரணங்கள், வாகனங்கள், இயந்திரங்கள் போன்ற பொருட்கள் செயற்திட்ட இறுதியில் மீள் ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமெனினும் அவ்வாறு நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காக ஒன்றித்த பிணைமுறை ஒன்று அல்லது வங்கி பிணைமுறி ஒன்று அல்லது திறைசேரி உண்டியல் என்பன பண்டங்களை விடுவிக்கும் சந்தர்ப்பத்தில் அமைச்சுச் செயலாளரினால் வழங்க வேண்டும். அவ்வாறு செய்யப்பட்டதற்கான சான்றுகள் அல்லது அது தொடர்பான விபரங்கள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அவ்வாறான

பண்டங்களை தெளிவாக இனங்காணும் நடைமுறை ஒன்றும் அமைச்சினால் அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

— மாத்தறை முதல் அந்தரவெவ ஊடாக ஹம்பாந்தோட்டைக்கு செல்லும் பாதையில் 04 ஆம் பகுதியின் ஒப்பந்த உடன்படிக்கைகள் 2013 நவம்பர் 19 திகதி கையொப்பமிடப்பட்டிருந்தது. மிகவும் விரைவில் செயற்திட்ட நடவடிக்கை ஆரம்பிப்பதற்காக காணிகளை உரித்தாக்கல் விடயங்கள் 2014 மே 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதே போல் 2013 நவம்பர் 01 திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், காணிகளை உரித்தாக்கும் காலம் 72 வாரங்கள் முதல் 26 வாரங்கள் வரை குறைக்கப்பட்டிருந்ததுடன் அந்த கருமத்தில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களுக்காக ரூபா 30.56 மில்லியனிற்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு மற்றும் அவ்விடயத்திற்காக சேர்க்கப்பட்டிருந்த 13 மதியுரைஞர்களுக்கு ரூபா 19.01 மில்லியனிற்கான படி ஒன்றும் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், ஒப்பந்த வேலையின் 4 ஆவது பகுதி தொடர்பாக மகாவலி அதிகார சபையினால் உரித்தாக்கிய மகாவலி அதிகார சபையில் இருந்து உரித்தாக்கிய காணி ஒன்றில் கருங்கற்களை உடைத்து அகற்றியமையால் அண்ணளவாக 40 மீற்றர் நீளம் 30 மீற்றர் ஆளமான கிடங்கு ஒன்று ஏற்பட்டிருந்தது. இந்த கிடங்கை நிரப்புவதற்காக ரூபா 386.66 மில்லியன் தொகை செலவிடப்பட வேண்டுமென மதிப்பீடு செய்யப்பட்டு அது அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணம் செயற்திட்டத்திற்கு மேலதிக கிரயம் ஒன்றாக இருந்ததால் பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(xii) தெற்கு அதிவேக நீடிப்புக்கான மதியுரை சேவை**

இது தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

— இந்த செய்திட்டத்தின் நிர்மாண வேலைகள் மற்றும் வரைபுகளை மேற்பார்வை செய்வதற்கான உடன்படிக்கை 2014 திசெம்பர் 03 திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் China Railway First Servery amd Desing கம்பனியுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் மதியுரை கம்பனியினை தெரிவு செய்வதற்காக அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடைபெற்றிருக்கவில்லை.

— செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் நிர்மாண வேலை மேற்பார்வை விடயங்கள் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு (CECB) சாட்டப்பட்டிருந்தது. அதற்கான உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தில் விவகாரங்கள் 2014 செப்தெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2015 செப்தெம்பர் மாத அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 24.84 மில்லியன் தொகை CECB இற்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கருமங்கள் தொடர்பான கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

— மதியுரைக் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இன்வொயிஸின் பிரகாரம் ரூபா 1,083.97 மில்லியன் தொகை பெறுமதியான வேலைப்பகுதிகள் தொடர்பாக சிட்டை போடப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 திகதி அளவில் இன்வொயிஸ் பெறுமதியில் ரூபா 188.94 மில்லியனிற்கான வேலை பகுதிகள் மாத்திரம் செயற்திட்டப் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. கொடுப்பனவிற்காக நிதியம் வழங்குவதற்கான கடன் உடன்படிக்கை ஒன்று கையொப்பமிட்டிருக்காமையால் கொடுப்பனவு செய்தல் தாமதித்த காரணத்தினால் தாமத வட்டி செலுத்துவதற்கு நேரிடும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

- உடன்படிக்கையின் 4.1 பிரிவில் குறிப்பிட்டுள்ள பொதுவான நிபந்தனையின் கீழ் தொழில் வழங்குனர்களினால் அங்கீகரிக்கப்பட்டிந்த பதவியணியினர் சேர்க்கப்பட்டு மதியுரை சேவை வழங்கப்பட வேண்டுமெனினும், உடன்படிக்கையின் பிரகாரம் சேர்க்கப்பட வேண்டிய ஊழியர்கள் மற்றும் உண்மையாக சேவையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை இடையே வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. உள்நாட்டு ஊழியர்கள் மற்றும் வெளிநாட்டு ஊழியர்களுக்காக முறையே ரூபா 1,662.46 மில்லியன் தொகை மற்றும் ரூபா 5,832.07 மில்லியன் தொகை ஆக கொடுப்பனவு செய்வதற்கு இணங்கியிருந்தது. அதன் காரணமாக உயர்ந்த அனுபவமுடைய தகைமைகள் உடைய உத்தியோகத்தர்கள் வெளிப்படைத் தன்மையுடன் சேர்க்கப்பட்டிருந்ததென உறுதிப்படுத்துவதற்காக போதிய தகைமைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த பதவிகளுக்கு சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் தகைமைகளை பரிசோதனை செய்வதற்காக தேவையான சான்றிதழ்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

- மதிஉரைஞர் கம்பனியினால் கிரய மதிப்பீடுகளில் காட்டப்பட்டிருந்த சம்பள ரேட் ஐ விட மிகவும் குறைந்த சம்பள ரேட் ஒன்று அவ் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. உதாரணமாக வெளிநாட்டு வதிவிட பொறியியலாளர் ஒருவருக்கு ரூபா 28,000 அமெரிக்க டொலர்கள் செலுத்துவதற்கு மதிப்பீடு செய்திருந்த போதிலும், உண்மையாக 12,500 அமெரிக்க டொலர்கள் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிலைமை உத்தியோகத்தர்களின் தொழிலுக்கு ஆற்றும் அர்ப்பணிப்பினை குறைப்பதுடன் மேற்பார்வை விடயங்களில் காணப்படும் பண்புகள் தொடர்பாகவும் பிரதிகூலமாக தாக்கியிருந்ததென அவதானிக்கப்பட்டது.

- இலங்கை செயற்திட்டமொன்றில் சேவையாற்றுவதற்காக வெளிநாட்டு ஆட்களினால் வதிவிட வீசா(Resident Visa) பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும், குடிவரவு குடியகழ்வுச் சட்டங்களுக்கு முரணாக சுற்றுலா வீசா பெற்றுக்கொண்டு இந்நாட்டுக்கு வந்திருக்கும் ஆட்களை சேவையில் ஈடுபடுத்தியிருந்தன என அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக ஊழியர்கள் அடிக்கடி நாட்டிங்கு வருதல் மற்றும் நாட்டிலிருந்து வெளிச்செல்லல் செயற்திட்டத்தின் செயற்பாடுகளுக்கு பிரதிகூலமான முறையில் தாக்கியிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

- வேறு நிறுவனங்களில் கடமையாற்றுவதற்காக வந்திருக்கும் வெளிநாட்டவர்களும் இந்த செயற்திட்டத்தின் கீழ் கடமையில் ஈடுபட்டிருந்தது மேலும் அவதானிக்கப்பட்டது.

- மதிப்புரை உடன்படிக்கை 1.4 பிரிவில் குறிப்பிட்டுள்ள பொதுவான நிபந்தனையின் கீழ் செயற்திட்டத்தின் கருமங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய மொழி ஆங்கில மொழியாக இருக்க வேண்டும். எனினும் ஆங்கில மொழி தேர்ச்சி இல்லாத உயர்மட்ட உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டிருந்தன எனவும் சேவையில் ஈடுபட்டுள்ள மொழிபெயர்பாளர்களுக்கு பொறியில் அறிவு காணப்படவில்லை எனவும் மேற்கொள்ளப்பட்ட நேர்முக பரீட்சையில் உறுதிப்படுத்தப்பட்டது.

- செயற்திட்ட அலுவல்கள் மற்றும் கோவைகள் மிகவும் பிழையற்ற முறையில் மற்றும் இலகுவாக இனங்காணக் கூடிய விதமாக ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் வரைபுகள் மற்றும் கணிய பத்திரங்கள் உரிய முறையில் பகுப்பாய்வு செய்து தாமதமின்றி செயற்திட்டத்தின் விடயங்களை மேற்கொள்ள முடியுமாக இருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(xiii) தெற்கு அதிவேக பாதையின் நீடிப்பின் நடைபாதை (Pavment) திட்டமிடல்**

ஒட்டு மொத்த அதிவேக வீதியில் நடைபடை வாகன வகைப்படுத்தல் வகுப்பின் பிரகாரம் திட்டமிடல் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் நியமக் குறியீடுகளுக்கு இணங்காத முறையில் அந்த வேலைப்பகுதி திட்டமிடப்பட்டிருந்தமையால் செயற்திட்டம் தொடர்பாக நேரிடக் கூடிய மேலதிகக் கிரயம் ரூபா 01 பில்லியன் முதல் ரூபா 02 பில்லியன் இடைப்பட்ட வீச்சு அளவாக இருக்குமென கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது. அதேபோல் நடைபாதையை திட்டமிடுவதற்காக தகைமையுடைய அனுபவமுள்ள உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட வேண்டுமெனினும் அதற்காக தகைமையுடைய உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தியிருக்கவில்லை.

**(xiv) நெடுஞ்சாலைகள் பிரிவில் நிகழ்ச்சித் திட்டமொன்றினை திட்டமிடல், பாதீட்டு விடயங்கள் மற்றும் மேற்பார்வை விடயங்களுக்காக மதிஉரைஞர் ஒருவரைச் சேர்த்தல்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

– செயற்திட்டத்திற்காக மதிஉரைஞர் சேர்க்கும் நடைமுறைக்கு முரணாக மற்றும் விண்ணப்பம் கோரப்படாமல் அமைச்சு செயலாளரினால் சிரேஷ்ட செயற்திட்ட பணிப்பாளர் ஒருவருக்கு சமர்ப்பித்திருந்த 03 சுய விவரங்கள் (Bio Data) மீது ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. சுய விவரங்களில் (Bio Data) காணப்பட்ட திகதி ஆட்சேர்ப்பதற்கு தேவை தொடர்பாக அறிவித்திருந்த கடிதத்திற்கு முன்னைய திகதி ஒன்றாக இருந்ததுடன் இரண்டு சுயவிவர அறிக்கைகளில் திகதியின்றி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மதிஉரைஞர் சேர்த்தல் நேர்முகப் பரீட்டசைக் குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் இந்த ஆட்சேர்ப்பதற்காக நேர்முகப் பரீட்சைக் குழு நியமனம் செய்யப்பட்டதனை உறுதிப்படுத்தும் விபரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

– தெற்கு அதிவேக பாதையின் மூன்றாம் பகுதிக்கு (Section 03) தொடர்புடைய பில்பத்திரங்களுக்கு மதிஉரைஞரின் படி உட்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யும் அடிப்படையின் மீது மதிஉரைஞர் சேர்க்கப்பட்டிருந்தார். அவ்வாறாயினும், அந்தக் கொடுப்பனவுக்காக முகாமைத்துவச் சேவை திணைக்களத்தில் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

– 2016 மார்ச் 24 ஆம் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டப் பணிப்பாளருக்கு மாத்திரம் வாகனம் ஒன்று மற்றும் சாரதி ஒன்று இணைக்கக் கூடியதாக இருந்தது. எனினும் அந்த ஆட்சேர்ப்பு தொடர்பான பெறுகைகள் குழுவினால் ரூபா 15,000 இற்கான நாளாந்தப் படியொன்றுடன் வாகனம் ஒன்றும் சாரதியும் இந்தப் பதவிக்காக வழங்கப்பட்டிருந்தது. எனினும் நாளாந்தம் ரூபா 15,000 இற்கான படி செலுத்துவதற்காக அங்கீகரித்த அடிப்படை தொடர்பான தகவல்கள் கணக்காகய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. 2017 ஜூலை மாதம் வரை கூட்டுத்தொகை ரூபா 3.53 மில்லியன் படியொன்று அங்கீகரித்திருந்ததுடன் அந்த படியில் இருந்து ரூபா 585,500 தொகை உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்காமல் செயற்திட்டத்தினால் அந்த வரி செலுத்தப்பட்டிருந்தது.

– தெற்கு அதிவேக வீதி நீடித்தலின் நிகழ்ச்சித் திட்டத்தை திட்டமிடல், பாதீடு தயாரித்தல் மற்றும் செயற்திட்ட அலுவல்களை மேற்பார்வைக்காக இந்த மதிஉரைஞர் பதவி ஏற்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட மேற்பார்வைக் குழுக்

கூட்டங்கள் எதற்கும் அது மதிஉரைஞர் பங்குபற்றி இருக்கவில்லை. எனினும் அந்த மதிஉரைஞர் வேறு செயற்திட்டங்களுக்காக சேவைகள் வழங்குவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.10 உள்நாட்டு நிதியளிப்புக்கள் மூலம் செயற்திட்டங்கள் செயற்படுத்துதல்

**செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்படல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பை அண்டிய பகுதிகளில் மோட்டார் வாகனப் போக்குவரத்து முகாமைத்துவ செயற்திட்டம் (Traffic Management in greater Colombo Area) திற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 25 மில்லியன் ஏற்பாடுகள் வழங்கியிருந்த போதும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த வருடமும் இந்த வேலைகளுக்காக ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மேம்பால கடுகதிப் பாதை முதலீட்டு செயற்திட்டத்தின் முன் சாத்தியக்கூறு ஆய்வு (Expresway Elevated Highways Inverstment Project) ற்காக குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கத்தின் மூலம் ரூபா 24 மில்லியன் ஏற்பாடுகள் வழங்கியிருந்த போதிலும், 2016 வருட இறுதி வரை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.11 வழங்கப்படாத பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காக பணம் செலுத்துதல்

தெற்கு அதிவேக பாதை அபிவிருத்தி செயற்திட்டத்தை உரித்தில்லாத கிராமிய பாதைகள் நிர்மாணிக்கும் வேலைகளுக்காக முறையான உடன்படிக்கை மற்றும் முறையான நிகழ்ச்சித் திட்டமின்றி தெற்கு அதிவேக பாதை அபிவிருத்தி செயற்திட்டத்தில் மீதியாக இருந்த ரூபா 1,570 மில்லியன் தொகையினை செயற்திட்டத்துடன் தொடர்பு ஒன்று காணப்படாத கம்பனி ஒன்றிற்கு முற்பணமாக செலுத்தியிருந்தது. அந்த முற்பணத்திற்காக வழங்கியிருந்த முற்பணப் பிணை முறியின் காலமும் 2016 திசெம்பர் 31 திகதி காலம் முடிவடைந்திருந்ததுடன் 2017 நவம்பர் 30 திகதி அளவில் அந்த முற்பணங்களில் ரூபா 70 மில்லியன் தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

### 3.12 சிக்கல் தன்மையுள்ள விடயங்கள்

இலங்கை அரசாங்க ஜனாதிபதி புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இரண்டு மாணவர்களுக்கு SAITM மருத்துவ பட்ட பாடநெறிக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை அரசாங்கத்தின் ஜனாதிபதி புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பேராதனை விவசாய பீடத்தின் BSC Animal science மற்றும் Agri cultural Technology and Managment ஆகிய பாடநெறிகளுக்காக பாகிஸ்தானைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் பதிவு செய்திருந்தனர். பின்னர் அரச சார்பற்ற பட்டம் வழங்கும் நிறுவனமான South Asian Institute of Technology and Medicine (Pvt) Ltd (SAITM) இல மருத்துவ பட்ட பாடநெறிக்காக அந்த மாணவர்களை பதிவு செய்வதற்காக 2013 ஆண்டின் போது உயர்கல்வி அமைச்சினால் நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த இரண்டு மாணவர்களுக்காக உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் SAITM நிறுவனத்திற்கு 2017 ஜூன் மாதம் வரை மாதாந்த புலமை பரிசில் செலுத்தியிருந்தது. எனினும், அதற்கான முறையான அங்கீகாரம் ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) இந்த புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் பல்வேறு பாடநெறிகளுக்காக இலங்கை பல்கலைக்கழகங்களில் பதிவு செய்யும் வெளிநாட்டு மாணவர்கள் குறிப்பிட்ட

பாடநெறியினை பூர்த்தி செய்யாமல் நாட்டைவிட்டுச் சென்றுள்ள சந்தர்ப்பங்கள் கடந்த 04 ஆண்டுகளின் போது வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் 2012/2013 கல்வி ஆண்டு முதல் 2015/2016 ஆண்டு வரை 04 ஆண்டுகளின் போது முறையே 26,16,26 மற்றும் 04 சதவீதமாக நாட்டைவிட்டுச் சென்றிருந்தனர். அதன் பிரகாரம் மாணவர்கள் 04 பேர் 2012/2013 கல்வி ஆண்டின் போது பாடநெறியை விட்டுச் சென்றிருந்ததுடன் அவர்களுக்காக ரூபா 1,735,000 தொகை அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது. அந்த செலவினை திருப்பி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அந்த மாணவர்களுக்காக பல்கலைக்கழகத்திற்கு செலுத்தியிருந்த ரூபா 330,000 தொகையினை மீண்டும் அமைச்சிற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.13 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்**

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமில்லாத பிராந்திய பாதைகளை (Non RDA Roads) விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக 2016 ஆண்டின் போது மற்றும் 2017 ஆகஸ்ட் மாதம் வரை முறையே ரூபா 1,868 மில்லியன் தொகை மற்றும் ரூபா 1,795 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் இந்த செயற்திட்டங்களுக்கான செலவுகளை தீர்ப்பதற்காக திறைசேரியினால் ஏற்பாடுகளுக்கு அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான பாதைகள் விரிவாக்கும் மற்றும் அபிவிருத்தி செய்யும் விடயங்களுக்காக பெற்றிருந்த ஏற்பாடுகள் இதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.14 செயலாற்றுகை**

2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்பு ஒன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

போதிய அளவினதாக நிறைவேற்றப்படடாத பிரதான கருமங்கள்

ஆமைச்சின் பிரதான கருமங்கள் போதியளவாக நிறைவேற்றப் பற்றிருக்காதுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2005 அக்தோபர் 26 திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2006 ஜனவரி மாதம் முதல் செயற்படு விதமாக பெற்றோல் மற்றும் டீசல் விற்பனை மூலம் அரசுக்கு கிடைக்கும் வருமானத்தில் பெற்றோல் லீற்றர் ஒன்றில் இருந்து ரூபா 1 தொகையும், டீசல் லீற்றர் ஒன்றிலிருந்து 50 சத வீதம் வீதி அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கும் விதமாக அரசினால் ஏற்பாடுகள் வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், இந்த பிரரேணை 2016 திசெம்பர் 31 திகதி வரையும் செயற்திபடுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது அவ்வாறு விற்பனை செய்யப்பட்ட பெற்றோல் மற்றும் டீசல் தொடர்பான வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு செலவு வைக்கப்பட வேண்டிய செஸ் வரி ரூபா 2,413.86 மில்லின் ஆக இருந்தது. அமைச்சின் கருமங்களை குறிப்படும் போது ''வீதி அபிவிருத்தி நிதியமொன்று ஏற்படுத்துதல்'' என்ற விடயத்திற்காக அமைச்சு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) அமைச்சின் 2016 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மகநெகும வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,000 மில்லியன் ஏற்பாடுகளைப் பயன்படுத்தி கிராமிய பாதைகள் 193.9 கிலோமீற்றர் தூரம் வீதி அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2016 வருட இறுதி அளவில் மகநெகும வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ரூபா 364.3 மில்லியன் ஏற்பாடுகள் கிடைத்திருந்த போதிலும் அவற்றில் ரூபா 293.8 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அவற்றில் கொங்கிரீட் பரப்பி அபிவித்தி செய்திருந்த

பாதைகள் 33.33 கிலோமீற்றர்களாகும். அதன் பிரகாரம் இலக்காகிய ஏற்பாடுகளில் 36 சதவீதம் கிடைத்திருந்த போதிலும் அவற்றின் பௌதீக முன்னேற்றம் சுமார் 20 சதவீதம் அளவில் இருந்தது.

(இ) அமைச்சின் கருமங்கள் மற்றும் செய்பணிகளிடையே மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான பாதைகள் தொடர்பாக தேசிய கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தயாரித்தல், அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களின் கூட்டிணைப்பு மற்றும் நடாத்துதல் என்பன நடைபெற வேண்டியிருந்தது. எனினும் அது தொடர்பான செயற்பாடுகள் ஏதும் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என வெளிப்படுத்தப்பட்டது.

**3.15 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

**(அ) நெருஞ்சாலைப் பிரிவு**

நெருஞ்சாலைப் பிரிவில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி யினர் | உள்ளவாறான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 28 | 22 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 370 | 269 | 101 |
| (iv) | ஆரம்ப நிலை | 38 | 28 | 10 |
| (v) | ஏனையவை(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 04 | 01 | 03 |
| | **மொத்தம்** | **443** | **322** | **121** |

**(ஆ) உயர் கல்விப் பிரிவு**

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி யினர் | உள்ளவாறான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 24 | 20 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 132 | 84 | 48 |
| (iv) | ஆரம்ப நிலை | 45 | 25 | 20 |
| | **மொத்தம்** | **205** | **131** | **74** |

**(இ) முறைசார் விதமாக பெற்றிருந்த மனித வளங்கள்**

2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பதவியணியினர் முறையே 260 பேர் மற்றும் 48 பேர் அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அந்த பதவியணியினருக்கு சம்பளமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கூட்டுத்தொகை ரூபா 40.59 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. அமைச்சினால் அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பதவியணியினரை அமைச்சுக்கு பெற்றிருந்ததுடன், அதிகார சபையினால் செலுத்தியிருந்த சம்பளத்தை அமைச்சினால் மீளளிப்பு செய்வதற்கு அமைச்சு செயற்பட்டிருக்கவில்லை.

**(ஈ) முறைசார் விதமாக வேறு தரப்பினருக்கு விடுவித்திருந்த மனித வளங்கள்**

அமைச்சினால் மீளாய்வாண்டின் போது வேறு தரப்பினருக்கு முறைசாரல விதமாக விடுவித்திருந்த மனித வளங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | விடுவித்திருந்த காலப்பகுதி |
|---|---|---|---|
| அபிவிருத்தி உதவியாளர் | 01 | கேகாலை உயர் தொழில்நுட்ப நிறுவகம் | 2015 பெப்ரவரி 02 திகதி முதல் 2017 திசெம்பர் 12 திகதி வரை |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 159 | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 2013 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 12 திகதி வரை |